ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/52 - 2020 මාර්තු මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.03.05

*2165/52 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு எடம்பிடிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் பல்லேகம, தவலன்தென்ன நீர் களஞ்சியத் தொட்டியை, நீர் இறைக்கும் இயந்திரசாலையை மற்றும் உட்செல்லும் பாதை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
இலக்கம் 35, ''லக்திய மெதுர'',
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, மாச்சு 24.
5/2/3/1534.


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*பதுளை மாவட்டத்தில், ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 55ஏ, பல்லேகம கிராம அலுவலர் பிரிவில் பல்லேகம கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கொடமடித்த பதன காணி என்றழைக்கப்படுகின்ற, காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 0.075 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*தெற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : தலைவர்,*
*காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு.*

*03-829*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.